# 2.1 அவதானிப்புக்களும் ஆலோசனைகளும்

### 2.1.1 அவதானிப்புக்கள்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் கீழும் அதனைத்தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள் கீழும் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளுக்கு அமைய ஒம்புட்சுமான் அலுவலக பரப்பெல்லையினுள் உள்ளடங்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகவுள்ளது. அதற்கமைய, அரசியலமைப்பு 156 இல் குறித்துரைக்கப்பட்டவாறு பிரசைகளுக்காக கடமையில் ஈடுபடும் அரசாங்க அலுவலர்களினால் கடந்த ஆண்டில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட அநீதி தொடர்பில் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் பரிகாரம் வழங்குவதற்கு இந்நிறுவனம் முயற்சி எடுத்துள்ளது. நட்புணர்வுடன் தீர்க்க முடியாத விடயங்களை இவ்வலுவலகம் வழக்கின் இயல்புகளை அவதானித்து பரிந்துரை வழங்குகிறது. இவ்வலுவலகம் பிணக்குகளுக்கு சாத்தியமான அளவு மிக விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் தொலைபேசி மூலமும் கடிதத்தொடர்பு மூலமும் தொடர்பு கொண்டு பிணக்குகளை தீர்ப்பதற்கு பெரும் முயற்சி எடுத்துள்ளது. இவ்வாண்டின் மீளாய்வில், சுருக்கமான விசாரணைகள் மூலமாகவும் இருகட்சிகளுக்கிடையிலான விசாரணைகள் மூலமாகவும் மொத்தமாக 1366 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மிகுதி 828 முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைக்காக 2021 ஆம் ஆண்டிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

விசாரணை ஆரம்பிப்பதற்கு மனுதாரர்கள் போதியளவு தரவுகள் முன்வைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகவுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் அம்முறைப்பாட்டாளர் போதியளவு தகவல்களை இந்நிறுவனத்திற்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படுவர். பொதுவாக எவ்வலுவலருக்கு எதிராக முறையீடு செய்கிறீர்கள் எனவும், நீங்கள் எவ்வகையான உரிமை மீறலுக்கு உட்பட்டுள்ளீர்கள் எனவும், உங்களுக்காக என்ன தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும் என்னும் அவசியமான தகவல்களை நாம் விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாக "ஓஎம்பி -01" என்ற விண்ணப்ப படிவம் சகல முறைப்பாட்டாளருக்கும் அனுப்பப்படும்.

இவ்வருடத்தில் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் அவதானிக்கும் போது 2019 ஆம் ஆண்டில் அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு எதிராக பெற்றுக் கொண்ட முறைப்பாடுகள் குறைவாகவே உள்ளது. 2020 ஆம் ஆண்டில் இந்த அமைச்சின் விடய பரப்பில் ஏற்பட்ட மாற்றமே முறைப்பாடுகள் குறைவதற்கு காரணமாக இருந்திருக்கலாம். நிர்வாகம், உளநாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் விடய பரப்பு இரண்டு விடய பரப்புக்களாக பிரிக்கப்பட்டதே காரணமாகும். அதற்கமைய உள்நாட்டலுவல்கள் மற்றும் அனார்த் முகாமைத்துவ அமைச்சுக்கு எதிராக 160 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலான எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பிரதேச செயலகத்திற்கும், மாவட்ட செயலகத்திற்கும் எதிரான முறைப்பாடுகளாகவுள்ளன. அரசகாணி மற்றும் மகாவலி காணிகள் என்பவற்றுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவர்களுடைய சொத்துரிமை போன்றவை தொடர்பில் முன் வைக்கப்பட்ட முறைப்பாடுகள் ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டுகளை விட அதிகரித்துள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் கல்வி திணைக்களங்களில் உள்ள அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவுள்ளது. அதில் தரம் 1 மாணவர்களின் அனுமதி தொடர்பான முறைப்பாடுகளே பெருமளவில் பெறப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. நேர்காணலின் போது புள்ளிகள் வழங்கலில் தவறுகள் ஏற்பட்டுள்ளன. மனுதாரர்களின் வதிவிடங்களிலிருந்து பாடசாலைகள் அமைந்துள்ள சுற்று வட்டத்திற்கு இடைப்பட்ட தூரத்தை கணிப்பதிலேயே இப்பிரச்சனை எழுந்துள்ளது.

பிரதேச சபைகள், நகர சபைகள், மற்றும் மாநகர சபைகள் என்பன உள்ளடங்களாக உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள், வடிகாலமைப்பு முறையில் தடங்கல், அபாயகரமான முறையில் மரங்களை தறித்தல், மற்றும் அதிகாரமளிக்கப்படாத கட்டட நிர்மாணங்கள் போன்ற வகையான பல முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. இத்தகைய பெருமளவிலான பிரச்சனைகள் வெற்றிகரமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

ஓய்வூதிய திணைக்களத்துக்கு எதிராக பெறப்பட்ட முறைப்பாடுகள் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக உள்ளது. ஓய்வூதிய திணைக்களம் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு விரைவான பதில்களை வழங்கி நடவடிக்கை எடுப்பதால் முறைப்பாட்டாளரிகளின் பிரச்சனைகளை வெற்றிகரமாக தீர்ப்பதற்கு சாத்தியமாக இருந்து. சில சமயங்களில் பதில்களை பெற்றுக் கொள்வதற்கு நினைவூட்டல்கள் அனுப்ப வேண்டியிருந்தது.

தனிப்பட்ட குழுக்களுக்கிடையிலான பிரச்சனைகள், நீதி மன்றத்தில் நிலுவையாகவுள்ள விடயங்கள், அரசாங்க அலுவலர்களின் நியமனம்/ இடமாற்றம்/ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் தீர்மானம்/ பரிந்துரை/செயற்பாடுகளுடன் இணங்காத விடயங்கள் என்பன ஒம்புட்சுமானின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட விடயங்களாகும். இவ்வகையான பிரச்சனைகள் ஆரம்ப நிலையிலேயே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாது மறுக்கப்படும். இன்னொரு முக்கிய விடயமாக சிலர் அலுவலகத்திற்கு முறைப்பாடுகளை மிகவும் காலதாமதமாக அனுப்புகிறார்கள். மிகவும் காலதாமதமாக அனுப்புவதற்கான காரணம் தெளிவாக குறிப்பிடாவிட்டால் அவ்வகையான முறைப்பாடுகள் ஆரம்பத்திலேயே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது மறுக்கப்படும். முறைப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலர்கள் நாம் சமர்ப்பிக்கும் பிரச்சனைகளுக்கு பதில் அனுப்பி பிரச்சனைகளை தீர்ப்பதில் தயக்கம் காட்டுவதால், தாமதமாக அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். எனவே பிரச்சனைகளை தீர்ப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை குறிப்பிட வேண்டியுள்ளது.

இவ்வலுவலகத்தில் விசாரணை அல்லது புலனாய்வு நடாத்தப்படும் போது அலுவலர்கள் நியாயமான வழிகளை கடைப்பிடிப்பதில் சரியான முறையில் கவனம் செலுத்தாது அலுவலர்கள் சவாலான தீர்மானங்களை அல்லது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு தமது நேரங்களை வீணாக்குவதுடன் வீணான முயற்சிகளை எடுக்கிறார்கள். மேலும் தவறான செயற்பாடுகளால் பிரசைகளுக்கு ஏற்படும் தீங்கு மற்றும் விளைவுகளின் தீவிரத்தை அலட்சியப்படுத்தி தவறான செயற்பாடுகளையும் தவறான தீர்மானங்களையும் எடுக்கும் அலுவலர்கள் உள்ளனர் என புலப்படுகிறது. அவ்வகையான நடவடிக்கைகளால் நிர்வாகத்தில் எந்தவொரு நன்மையும் ஏற்படபோவதில்லை மாறாக இச்செயற்பாடுகள் முழு முறைமைகளையும் தவறான வழிக்கு இட்டுசெல்லும். அதேபோல் பிரசைகளால் முன்வைக்கப்படும் நியாயமான முறைபாடுகளை அரசாங்க அலுவலர்கள் ஏற்றுக் கொள்ள மற்றும் செவிமடுக்க முன் வராவிட்டால், நாட்டின் நிர்வாகம் நலிவடைந்து செல்வது உறுதியாகும்.

எமது நாட்டில் கோவிட் 19 தொற்று நோய் பரவும் சூழ்நிலையிலும் எமது அலுவலகம் அலுவலக நடவடிக்கைகளை எவ்வித தாமதமின்றி மேற்கொண்டுள்ளது. எமது நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தபோதும் அலுவலகங்கள் ஏப்பிரல் மாதம் மட்டுமே தமது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தன. இதனால் குழுக்களுக்கிடையிலான விசாரணைகள் பிற்போடப்பட்டன. தற்போது வழமைபோல் அலுவலக செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### 2.1.2 ஆலோசனைகள்

இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்ட முறைபபாடுகளில் உள்ள விடயங்களை கருத்தில் கொண்டு தவறான நிர்வாக தீர்மானங்களுக்கு எதிராக ஆலோசனைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

OMB/P/2/2/3517/2019 ஆம் இலக்க கோவை மூலம் முன்வைக்கப்பட்ட பிரச்சனையானது 38 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் சொத்துரிமை இழக்க நேரிட்டுள்ளது.

காலி மாவட்ட கரந்தெனியா பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள L.L.55551 என்னும் இலக்கம் கொண்ட அனுமதி பத்திரத்திற்கு ஏற்புடைய காணிப் பிரதேசம் முறைப்பாட்டாளர் திருமதி.பி.ஏச்.சிறியாவதியின் தாயாருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர் உயிருடன் இருக்கும் போது அக்காணியின் பின்னுரித்து முறைப்பாட்டாளரின் மூத்த சகோதரனுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவரே பின்னுரிமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். திருமதி. சிறியாவதியின் தாயும் தந்தையும் இறந்து விட்டார்கள். 20 வருடங்களுக்கு மேலாக அவர்கள் மகாவலி நிலத்தில் வசித்த பின்னர் அவரது மூத்த சகோதரனும் 2019 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அவர் மகாவலி காணியில் குடியிருந்தாலும் முறைப்பாட்டாளரே (திருமதி. சிறியாவதி) அக்காணியை அபிவிருத்தி செய்து மேம்படுத்தி அக்காணியின் உடமையை பேணி வந்துள்ளார்.

அவரது மூத்த சகோதரன் இறந்த பின்னர், சகோதரனின் மனைவி அக்காணியின் சொத்துடமையை தனக்கு தருமாறு கரந்தேனிய பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார். பிரதேச செயலகம் காணியின் சொத்துடமையை உரிமை கோரும் இருகுழுக்களையும் அழைத்து 2019.10.09 ஆம் திகதியன்று விசாரணை செய்துள்ளது. அக்காணியின் ஆயுள் நில உரித்து திருமதி.சிறியாவதியின் மூத்த சகோதரனின் மனைவிக்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் சகோதரனின் மனைவி, திருமதி சிறியாவதிக்கு அக்காணியின் ஒரு பகுதியை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தார்.

இத்தீர்மானத்தால் திருமதி.பி.ஏச்.சிறியாவதிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் 38 வருடங்களாக அபிவிருத்தி செய்து பேணிவந்த காணியை திருமதி. சிறியாவதி இழந்துள்ளார். எவ்வாறாயினும் கரந்தெனியா பிரதேச செயலகம் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்திற்கு எதிரான தீர்மானத்தை எடுக்கவில்லை என்பதை அவதானிக்க வேண்டும்.

ஆயினும் ஒருவரால் காணி மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யப்படுமானால் அதில் விசேட கவனம் செலுத்தி மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்னும் பொது சட்டத்தின் எண்ணக் கருவை கரந்தேனியா பிரதேச செயலகம் அவதானிக்க தவறியுள்ளது.

இத்தகைய பின்னணியில் எதிர்காலத்தில் இவ்வகையான பிரச்சனைகள் ஏற்படுவதை தடுப்பதற்கு பின்வரும் ஆலோசனைகளை முன் வைக்கிறேன்.

1. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் சில ஏற்பாடுகளை சரியான வகையில் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து அதன் மூலம் இவ்வகையான பிரச்சனைகளை குறைக்கலாம்.
2. நீண்ட காலமாக அரச காணியை அபிவிருத்தி செய்து உடமையாக கொண்டுள்ளவர்களின் சொத்துடமையை அவர்களிடம் வழங்குவதற்கு ஏற்ற முறையில் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தை திருத்துதல் வேண்டும்.
3. அரச காணியொன்றின் அனுமதி பத்திரம் ஒன்றை வைத்திருப்பவர் இறந்த பின்னர், இறந்த நபரின் பெயரில் வழங்கப்பட்ட அனுமதி பத்திரம் எந்த நபருக்கு உரித்தாகும் என்னும் சந்தேசம் எழுந்துள்ளமை இந்த முறைப்பாட்டில் தெளிவாகியுள்ளது. இவ்விடயத்துக்கு விசேட கவனம் செலுத்தி காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தை சரியாக திருத்துதல் வேண்டும்.

OMB/P/2/2/3127 என்னும் இலக்க கோவை சம்பந்தப்பட்ட பிரச்சனையில் திருமதி கே.சிறியாவதி என்னும் இலக்க அனுமதிப்பத்திரத்தை கொண்ட இக்காணியானது முறைப்பாட்டாளரின் கணவர் இறந்த பின்னர்

பின்னுரித்தாளரான கணவரின் காணியின் சொத்துரிமையை தான் பெற்றுக் கொள்ள முடியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சனைக்குட்பட்ட காணியானது அகலவத்தை பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது. LL190 என்னும் இலக்க அனுமதிப்பத்திரத்தை கொண்ட இக்காணியானது முறைப்பாட்டாளரான திருமதி.கே.சிறியாவதியின் காலம் சென்ற அவரது கணவரின் தந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது. கணவரின் தந்தை 1981 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். பின்னுரித்தாளரான அவரது கணவர் 1983 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அதன் பின்னர் அக்காணியானது காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டதின் பிரிவு 85 இற்கு அமைய, அக்காணியின் உரித்தாளரை அடையாளம் காணமுடியாதிருந்ததால் அரசாங்கம் அக் காணியை சுவீகரித்துள்ளது.

அதன் பின்னர் திருமதி.கே.சிறியாவதி சத்தியக்கடதாசியை சமர்ப்பித்து அக்காணியின் சொத்துரிமையை கோரியுள்ளார். அந்நேரத்தில் அக்காணியில் உரிமையற்ற ஒருவர் குடியேரியுள்ளார். அகலவத்தை பிரதேச செயலாளர் உடமையை மீளப் பெறல் சட்டத்தின் கீழ் மதுகம நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்துள்ளார். உரிமையற்ற குடியிருப்பாளரை அகற்றுவதற்கு வெளியேற்றல் அறிவித்தல் வழங்கப்பட்டது. எனினும் தீர்ப்பை அமுல்படுத்தாததால் உரிமையற்ற குடியிருப்பாளரை அகற்ற முடியவில்லை. பின்னர் மேல் மாகாண காணியாணையாளர் அக் காணியை திருமதி சிறியாவதியின் பெயருக்கு மாற்றி அனுமதி பத்திரம் வழங்கும்படி பிரதேச செயலகத்திற்கு அறிவித்துள்ளார். அதற்கமைய அக்காணி தொடர்பில் ஏற்புடைய அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் உரிமையற்ற குடியிருப்பாளரை அகற்ற முடியாததால் அகலவத்தை பிரதேச செயலாளர் சட்டமா அதிபரிடம் அறிவுறுத்தலை கோரியிருந்தார். மதுகம நீதிமன்றத்தில் உரிமையற்ற குடியிருப்பாளரை அகற்றுவதற்கான வழக்கு தாக்கல் செய்துள்ளதால், சட்டமா அதிபர் செயலாளரால் கோரப்பட்ட அறிவுறுத்தலை வழங்கவில்லை. இக்காரணத்தினால் திருமதி.கே. சிறியாவதி அக்காணியின் சொத்துரிமையை இழந்துள்ளார். ஆக்கிரமிப்பாளர் இன்னும் அக்காணியின் நன்மையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலைகளில் ஏற்படும் இத்தகைய அநீதிகளை தவிர்ப்பதற்காக பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கலாம்.

1. அகலவத்தை பிரதேச செயலாளர் பிசுக்கால் அலுவலர்களின் உதவியுடன் குடியிருப்பாளரை அகற்றுவதற்கு அதிகாரம் இருந்தும், இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தும் ஏற்புடைய அலுவலர்களின் இயலாமை காரணமாக இக்கட்டளையை அமுல்படுத்த தவறியுள்ளனர். இத்தகைய பிரச்சனையை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என அலுவலர்கள் கட்டாயம் உறுதிபடுத்தி கொள்ளுதல் வேண்டும்.
2. சகல அரசாங்க நிறுவனங்களினதும் கோவைகள், அறிக்கைகள், ஆவணங்கள் போன்றன ஆவண காப்பகத்திற்கு அனுப்பப்படும் அல்லது அங்கிருந்து எடுக்கப்படும் போது முறையான நடவடிக்கை முறைகளை இந்நோக்கத்திற்காக அமைத்தல் வேண்டும். அத்துடன் ஆவணங்களில் முக்கியமாக தேவைப்படும் தகவல்கள் பதியப்பட்டு பொறுப்பான அதிகாரியின் பாதுகாப்பில் பேணப்படுதல் வேண்டும்.

புத்தளம் வலயக்கல்வி அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக சேவையாற்றும் திருமதி.எம்.ஏ.பி.ஏ. சந்தமாலி என்பவர் அபிவிருத்தி அலுவலர் சேவைக்கு உள்ளீர்த்த பின்னர் வகுப்பு

-11 இற்கு பதவியுயர்வு வழங்குமாறு OMB/P/4/4552 என்னும் இலக்க கோவையூடாக தனது கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இம்மனுதாரர் 2005.08.22 ஆம் திகதியன்று தபால் திணைக்களத்தில் அபிவிருத்தி உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர் அவர் வடமேல் மாகாணத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட பின்னர் 2016.06.20 ஆம் திகதி புத்தளம் வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுள்ளார். அதன்பின்னர் அவர் வடமேல் மாகாண பொதுசேவைகள் ஆணைக்குழுவிடம் 2015.08.22 ஆம் திகதியிலிருந்து தன்னை தரம் 11 இற்கு பதவியுயர்த்தும் படி கோரிக்கைவிடுத்தும், குறிப்பிட்ட சேவைக்காலம் மத்திய அரசாங்கத்திற்கு சார்பானது என அவரது கோரிக்கையை நிராகரித்தது. அதனை தொடர்ந்து மனுதாரர் தபால் திணைக்களத்திடம் தனக்கு தரம் 11 இற்கு பதவியுயர்வு வழங்குமாறு கோரியுள்ளார். பின்னர் அவரது கோரிக்கை அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டும், அவரக்கு பதவியுயர்வு வழங்கப்படவில்லை.

இதுதொடர்பில் இணைந்த சேவைகள் தாபன பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் பணிப்பாளர் மற்றும் தபால் திணைக்களத்தின் சிரேட்ட நிர்வாக செயலாளர் (தலைமையலுவலகம்) மற்றும் முறைப்பாட்டாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் இவ்வலுவலகத்தில் விசாரணை நடாத்தப்பட்டது.

இது தொடர்பில் பொதுசேவைகள் ஆணைக்குழுவிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. 10/2012 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக மனுதாரர் அபிவிருத்தி அலுவலர் சேவைக்கு உள்ளீர்பதற்கு உடன்பட்டுள்ளார். அத்துடன் அவர் பதவியுயர்வு பெறுவதற்கு தேவையான 10 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதால் பொது சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதுடன் அரசாங்க நிர்வாக அமைச்சும் அவர்கள் வழங்கிய அனுமதிக்கு அமைய செயற்பட்டது. அதன் மூலம் மனுதாரரின் பிரச்சனை தீர்க்கப்பட்டது.

இவ்வகையான பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு பின்வரும் ஆலேசனைகளை முன்வைக்கலாம்

1. அரசாங்க நிறுவனங்கள் முறையான இணைவுடன் விரைவாக செயற்படுதல் வேண்டும்.
2. அரசாங்க அலுவலர்கள் தமது நியமனங்கள் பதவியுயர்வுகள் தொடர்பிலான கோரிக்கைகளை காலம் தாமதிக்காது முன்வைத்தல் வேண்டும்.

OMB/P/2/7/822, OMB/P/2/7/826, OMB/P/2/7/829, OMB/P/2/7/831, OMB/P/2/7/832, OMB/P/2/7/839, OMB/P/2/7/861, OMB/P/2/7/882, OMB/P/2/7/912, போன்ற கோவைகள் மூலம், 45 வயதை அடையும் முன்னர் அமைய/ பதிலீடு/ தற்காலிகம்/ நாளாந்தம் போன்ற அடிப்படையில் நியமனங்களை பெற்ற முறைப்பாட்டாளர்கள் ஓய்வூதியத்தைபெற முடியாதிருந்துள்ளது. ஏனெனில் அரசாங்க சேவையில் அவர்களை பதவியில் உறுதிப்படுத்தும் போது அவர்களின் வயதெல்லை அரசசேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் வயதெல்லையை கடந்துள்ளது.

நிரந்தர நியமனம் வழங்கும் போது நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதும் என்னும் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. எவ்வாறாயினும் 60 வயதில் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏற்புடைய விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், தற்போதுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய, 45 வயதிற்கு பின்னரே

அலுவலர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் ஓய்வூதிய திணைக்களம் ஓய்வூதியம் வழங்குவதற்கான சாத்தியமில்லை என அறிவித்திருந்தது.

முறைப்பாட்டாளர்கள் தமது இவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குமாறு முறைபாட்டை முன் வைக்கும் போது, அவர்களது பிரச்சனை சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருப்பதால் அவர்களுக்கு தீர்வு வழங்க முடியாதுள்ளது.

எனவே 45 வயதிற்கு பின்னர் அரசாங்க சேவையில் நியமனம் வழங்கும் போது எவ்வாறு செயல்படுதல் வேண்டும் என்ற தெளிவான தீர்மானமொன்றை முன்வைப்பதன் மூலம் இவ்வகையான பிரச்சனைகளை தவிர்க்க முடியும் என நான் ஆலோசனை வழங்குகிறேன்.

இறுதியாக அரசாங்க அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும் தவறான செயற்பாடுகள் மற்றும் தவறான தீர்மானங்கள் என்பவற்றுக்கான தண்டனை வழங்க பிரேரணையொன்று உருவாக்கி அதற்கமைய சுற்றறிக்கைகள் வெளியிடப்படுதல் வேண்டும். தீர்மானம் எடுப்பவர்களுக்கு கடுமையான நடவடிக்கையாக இருந்தாலும் இது பயனுள்ளதொரு தீர்வு நடவடிக்கையாகும்.